(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 276]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2013 மே 22, புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1935/ '11

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல் யூலை மாதம் வரை தரக்குறைவான பெற்றோல் மற்றும் ஏனைய பெற்றோலிய உற்பத்திகளை இலங்கைக்கு விநியோகித்தவர் அல்லது விநியோகித்தவர்களையும்;

(ii) இந்த முறைகேட்டிலிருந்து அமைச்சு எவ்வாறு தவிர்க்கப்பட்டது என்பதையும்;

(iii) தரக்குறைவான பெற்றோல் உபயோகத்தால் பாதிப்புக்குள்ளான நுகர்வோரின் எண்ணிக்கையையும்;

(iv) தரக்குறைவான பெற்றோல் காரணமாக ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக முறைப்பாடுகளை மேற்கொண்ட வாடிக்கையாளரின் பெயர்களையும்;

(v) பாதிப்படைந்த ஒவ்வொரு நுகர்வோருக்கும் வழங்கிய நட்டஈட்டை வெவ்வேறாகவும்;

(vi) தரம் குறைந்த பெற்றோல் காரணமாக இயந்திரங்கள் பழுதடைந்த எரிபொருள் நிலையங்களின் எண்ணிக்கையையும்;

(vii) அவ்வாறான எரிபொருள் நிலையங்களுக்கு எவ்வாறு நட்டஈடுகள் வழங்கப்படுகின்றன என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) தரக்குறைவான பெற்றோல் சூழ்ச்சித் திட்டத்தை வெளிச்சத்திற்கு கொண்டுவந்த தரப்பினருக்கு கவர்ச்சிகரமான மிகையூதியமொன்று வழங்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2260/ '12

2.

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2012 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம், பல்கலைக்கழக மாணவர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற மஹாபொல புலமைப் பரிசில் தொகையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2278/ '12

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உத்தேச களுகங்கை திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி திட்டத்தை ஆரம்பிப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நீர்ப்பாசன திட்டத்தில் அடங்குகின்ற மொத்த நிலப்பரப்பு எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நிலப்பரப்பிலுள்ள விவசாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த காணிகளின் அளவு மற்றும் பயிரிடப்பட்டுள்ள விவசாய பயிர்கள் யாவையென்பதையும்;

(v) இதில் உள்ளடங்குகின்ற கிராமங்கள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி திட்டத்தினால் இடம்பெயர்கின்ற குடும்பங்கள் மற்றும் சனத்தொகை எவ்வளவென்பதையும்;

(vii) இத்திட்டத்தின் கீழ் அகற்றுவதற்கு நேரிடுகின்ற அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள்,விஹாரைகள் மற்றும் ஏனைய முக்கியமான இடங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டம் சம்பந்தமாக பெறப்பட்டுள்ள சுற்றாடல் சாத்தியக்கூற்றறிக்கையை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி திட்டம் செயற்படுத்தப்படுவதால் இடம்பெயரும் மக்களுக்காகவும் அவர்கள் இழக்கின்ற சொத்துகளுக்காகவும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) பொருளாதார ரீதியில் மிகவும் பெறுமதிமிக்க காணிகளை இழப்பதாலும் பெருமளவு மக்கள் இடம்பெயர்வதாலும் இத்திட்டத்தை நிறுத்துவதற்கோ அல்லது குறைந்த இழப்புகளுள்ள வேறு இடத்துக்கு எடுத்துச் செல்வதற்கோ நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2320/ '12

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012 சனவரி 15 ஆம் திகதி மரக்கறி கொண்டு செல்வதற்காக நடைமுறைப் படுத்தப்பட்ட கூடை முறைமை எவ்வாறு செயற்படுகின்றது என்பதையும்;

(ii) கூடை முறைமை அறிமுகம் செய்யப்பட்ட பின்னர் பழுதடையும் மரக்கறிகளை பாதுகாக்கும் நூற்றுவீதம் மற்றும் அதன் ரூபா பெறுமதி ஆகியவற்றையும்;

(iii) மேற்படி சேமிப்பு எவ்வாறு கணக்காய்வு செய்யப்படுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) கூடை முறைமையின் அமுல்படுத்தலின் காரணமாக மரக்கறி விலைகள் குறைந்துள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், ஒப்புறுதிப்படு சான்றுகளுடன் குறைக்கப்பட்ட விலை எவ்வளவு என்பதையும்;

(iii) கூடைகளை திரும்பவும் விவசாயிகளிடம் எடுத்துச் செல்லும் செலவினத்தைப் பொறுப்பேற்கும் ஆள் யார் என்பதையும்;

(iv) ஒரு வருடத்திற்கு விவசாயிகளிடம் கூடைகளைத் திரும்ப அனுப்பும் போக்குவரத்து செலவினம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2977/ '12

5.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடி தொடர்பாக ஏற்புடைய அலுவலர்களினால் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு எழுத்துமூல சான்றுகளுடன் விடயங்கள் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், இற்றைவரை அதற்கு எவ்விதமான பிரதிபலிப்பும் கிடைக்கவில்லையென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன நிர்வாகத்தினால் இன்றளவில் மோசடி செய்யப்பட்டுள்ள பணத்தொகை மற்றும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை பற்றிய சரியான புள்ளிவிபரத் தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) ஏற்புடைய அதிகாரிகளினால் நிதி மோசடிகளுடன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தொடர்பாக இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மோசடியான உத்தியோகத்தர் களுக்கு மக்கள் பணத்தை சூரையாடுவதற்கு இடமளிக்காமல் இவர்களுக்கு எதிராக செயலாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3066/ '12

6.

கௌரவ அஜித் பி.பெரேரா,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய மாகாண சபையைத் தாபித்து அதன் நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மத்திய மாகாண சபையினால் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள நியதிச்சட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நியதிச்சட்டத்தினதும் பெயர், இலக்கம் மற்றும் நிறைவேற்றப்பட்ட திகதி வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட,

(i) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் I ஆம் நிரலின் (மாகாண சபை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள்;

(ii) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் III ஆம் நிரலின் (ஒருங்கியை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச்சட்டங்கள் யாவையென்பதை

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அரசியலமைப்பின் மூலம் மாகாண சபைகளுக்கு விசேடமாக ஒப்படைக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பணிகள் தொடர்பாக நியதிச் சட்டங்களை நிறைவேற்றுதல் குறைவாகவே நடைபெறுகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3200/ '12

7.

கௌரவ பி. ஹரிசன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வட மத்திய மாகாண சபையினால் அநுராதபுர மாவட்டத்தில் நிர்மாணிக்கப் பட்டுள்ள பால் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பால்விற்பனை நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பால் விற்பனை நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பால் விற்பனை நிலையங்களின் மாடுகளின் புகைப்படங்களுக்கு மேலதிகமாக வேறு ஆட்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அப்புகைப்படங்கள் யாருடையதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இன்றளவில் மக்கள் பயன்பாட்டுக்காக திறக்கப்பட்டுள்ள மேற்படி பால் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) பயன்படுத்தப்படாது மூடப்பட்டிருக்கும் பால் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி பால் விற்பனை நிலையங்களை பேணிவரும் பொருட்டு ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஊழியர்களின் நியமனங்கள் நிரந்தர, தற்காலிக மற்றும் சேவை தேவைப்பாடுகள் ஆகிய அடிப்படைகளில் எந்த அடிப்படையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

(v) மேற்படி பால் விற்பனை நிலையங்களுக்கு பால் விநியோகிக்கும் நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3403/ '13

8.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு, முரக்கட்டான்சேனையைச் சேர்ந்த செல்லப்பிள்ளை மஹேந்திரன் எனப்படுபவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனில், குறித்த சிறைச்சாலை யாதென்பதையும்;

(iii) இவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளது ஒரு சிறைக்கைதியாகவா அல்லது சந்தேக நபராகவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இவர் கைது செய்யப்பட்ட திகதி, இடம் மற்றும் யாரால் கைது செய்யப்பட்டார் என்பதையும்;

(ii) இவரை கைது செய்வதற்கான காரணம் மற்றும் அதற்கேற்புடைய சட்டம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மஹேந்திரன் என்பவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு ஏதுவான குற்றச்சாட்டுகள், வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட திகதி, வழக்கு இலக்கம் மற்றும் நீதிமன்றம் யாவையென்பதையும்;

(iii) மேற்படி வழக்கின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(iv) மேற்படி நபரை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3436/ '13

9.

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொத்துஹெர பிரதேசத்தில் வசித்துவந்த வலிமுனிதேவகே சிலாவதீ என்பவர் சவூதி அரேபியாவில் சேவையாற்றியபோது உயிரிழந்துள்ளார் என்பதையும்;

(ii) இவரின் மரணம் கழுத்துப்பட்டியால் கழுத்தை நெருக்கியதன் காரணமாக இடம்பெற்றுள்ளதென மரண விசாரணையின்போது தெரியவந்துள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) சீலாவதீ என்பவரின் மரணம் தொடர்பான விசாரணை அறிக்கையை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி மரணம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி உயிரிழந்தவருக்கு உரித்தாக வேண்டிய காப்புறுதி உரிமைகள் மற்றும் நட்டஈட்டுத்தொகையை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3442/ '13

10..

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வீதி நிர்மாணக் கருத்திட்டங்களுக்காக அரசாங்கம் உள்நாட்டு வர்த்தக வங்கிகளில் கடன்களை பெற்றுக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) அனைத்து உள்நாட்டு வர்த்தக வங்கிகளிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தக் கடன் தொகை, அவற்றிற்கான கால எல்லை, வட்டி வீதம் மற்றும் வேறு நிபந்தனைகள் என்பனவற்றை தனித்தனியாக அவர் கூறுவரா ?

(இ) இன்றேல், ஏன்?

2514/'12

11.

கௌரவ சஜித் பிரேமதாச,— மீள் குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வட மாகாணத்தில் சம்பத்நுவர பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கஜபாபுரம் கிராமம் மீள்குடியமர்த்தல் வேலைத் திட்டத்தின் கீழ் உருவான ஒரு கிராமமாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி கிராமத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி கிராமத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு அரசாங்க அனுசரணையுடன் வழங்கப்படும் சலுகைகள் யாவை;

(iii) மேற்படி சலுகைகளை ஒரு குடும்பத்துக்கு வழங்குவதற்காக அரசாங்கம் செலவிட்டுள்ள மொத்தப் பணத்தொகை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2718/ '12

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக் கிரிக்கெட்டின் 2009, 2010, 2011 ஆண்டுகளிலும் 2012ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரையிலும் உள்ளவாறான காசு ஒதுக்கங்களையும்;

(ii) ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்தின் போதும் நிர்ணயிக்கப்பட்ட வருமானத்தினை இலங்கை கிரிக்கெட்டினால் அடைய முடியாமல் போயுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அச்சூழ்நிலைக்கான காரணத்தினையும்

அவர் கூறுவாரா?

(ஆ) கிரிக்கெட் போட்டிகளை ஒளிபரப்புச் செய்வதற்கான உரிமையை 2009, 2010, 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளின் போது விற்பனை செய்ததால் இலங்கை கிரிக்கெட்டிற்குக் கிடைத்த வருமானத்தினையும் அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2789/ '12

13\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு,

(i) ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) ஆலோசகர்கள் ஆட்சேர்க்கப்பட்ட திகதிகள் மற்றும் நீக்கப்பட்ட திகதிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்கூறப்பட்ட ஒவ்வொரு ஆலோசகரினதும்,

(i) கல்வித் தகைமைகள் மற்றும் தொழில் தகைமைகள்;

(ii) மாதாந்தம் செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளின் பெறுமதிகள்;

(iii) முந்திய சேவை நிறுவனங்கள்;

(iv) சேவைக் காலத்தில் கூட்டுத்தாபனத்திற்கு ஆற்றியுள்ள சேவை

தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2978/ '12

14\.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சிவில் விமான சேவைகள் அதிகார சபை தாபிக்கப்பட்டு 10 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் இதுவரை மேற்படி நிறுவனத்துக்கு நிரந்தரமான கட்டடமொன்று இல்லையென்பதையும்;

(ii) மேற்படி அதிகாரசபையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளினால் அரச நிதி முறைசாரா விதத்திலும் கவனயீனமாகவும் செலவு செய்யப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) கடந்த 10 வருடங்களாக சிவில் விமான சேவைகள் அதிகாரசபை பேணிவரப்படுகின்ற கட்டடத்துக்கு செலுத்தப்பட்டுள்ள வாடகைத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) நிலத்துக்கான வாடகையாக பெருமளவிலான குத்தகைத் தொகையை செலுத்தும் மேற்படி அதிகாரசபைக்காக நிரந்தரமான கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்தின் நிதியை கவனயீனமாகக் கையாண்ட அதிகாரிக்கு எதிராக ஏதேனும் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3067/ '12

15.

கௌரவ அஜித் பி. பெரேரா,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) வட மத்திய மாகாண சபையைத் தாபித்து அதன் நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) வட மத்திய மாகாண சபையினால் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள நியதிச்சட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நியதிச்சட்டத்தினதும் பெயர், இலக்கம் மற்றும் நிறைவேற்றப்பட்ட திகதி வெவ்வேறாக யாதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட,

(i) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் I ஆம் நிரலின் (மாகாண சபை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள்;

(ii) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் III ஆம் நிரலின் (ஒருங்கியை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச்சட்டங்கள்

யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— 7(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், 2013 மே மாதம் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை சபை அமர்வு தினமாக இருக்குமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2013 மே மாதம் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2.45 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்றச் சேவையின் சுயாதீனப் பண்பை வலுப்படுத்துவது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,— பாராளுமன்றச் சேவையின் சுயாதீனப் பண்பை வலுப்படுத்துவது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக 2010 ஒற்றோபர் மாதம் 21 ஆம் திகதி கௌரவ சபாநாயகரால் நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிகுழு, தன்னால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களை 2013 பெப்புருவரி மாதம் 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலம் பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இயலாதுள்ளதால், குறிப்பிட்ட தெரிகுழுவுக்கு வழங்கப்பட்ட கால எல்லையை 96 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் 2013 ஓகத்து மாதம் 31 ஆம் திகதி வரை கால நீடிப்புச் செய்யப்படுமாக.

4.

கௌரவ திளும் அமுணுகம,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"டென்ஸ்ரீ கல்வி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

5.

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"கண்டி தர்மராஜ கல்லூரியின் பழைய மாணவர் கழகத்தைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2013 ஏப்பிறல் 03 ஆந் திகதிய 1804/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2013.05.07ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1969 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1981 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1993 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1995 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1996 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் 155 ஆம் 156 ஆம் பிரிவுகளின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2012 திசெம்பர் 07 ஆம் திகதிய 1787/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.04.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1),— 2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.22 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.22

2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 01002ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "இலஞ்சம் சுற்றிவளைப்பின் போது இலஞ்சமாகப் பயன்படுத்துவதற்கு எடுக்கும் முற்பணம் - இலஞ்சம் அல்லது ஊழல் சார்த்துதல்களை கண்டுபிடிப்பதற்கான ஆணைக்குழு" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 5,000,000 இலிருந்து ரூபா. 9,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா. 7,500,000 இலிருந்து ரூபா. 16,000,000 வரை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2012.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் / மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2013.03.18 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.2),— 2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல. 23இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.23

2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரச்சாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனைக்கான (வெளியீட்டு உரிமையை பகிரங்கப்படுத்தல், மொழிபெயர்ப்பு உரிமையைக் கொள்வனவு செய்தல், மொழிபெயர்ப்புக் கட்டணம் மற்றும் பணியாளர்களின் சம்பளக் கொடுப்பனவு உட்பட) முற்பணம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — ரூபா. 2,900,000,000 இலிருந்து ரூபா. 1,850,000,000 வரை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா. 500,000,000 இலிருந்து ரூபா. 1,450,000,000 வரை

(இக்கட்டளை 2012.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் / மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2013.03.18 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.3),— 2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.24 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.24

2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 22302ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பண்டகசாலை (வெடி பொருட்கள்) முற்பணக் கணக்கு - இலங்கை கடற்படை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 450,000,000 இலிருந்து ரூபா. 550,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா. 450,000,000 இலிருந்து ரூபா. 550,000,000 வரை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2012.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் / மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2013.03.18 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.4),— 2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.25 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.25

2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 25002ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "ஏனைய அரசாங்கங்களுக்கு கொடுக்க வேண்டிய முற்பணம் - அரச கணக்குகள் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — ரூபா. 4,250,000 இலிருந்து ரூபா. 4,062,000 வரை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2012.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் / மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2013.03.18 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.5),— 2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.26 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.26

2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 28502ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "கமத்தொழில் பண்ணைகளின் பராமரிப்பும் விதைகள் விற்பனை முற்பணக் கணக்கு - கமத்தொழில் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 280,000,000 இலிருந்து ரூபா. 385,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — ரூபா. 290,000,000 இலிருந்து ரூபா. 375,000,000 வரை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2012.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் / மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2013.03.18 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.6),— 2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.27

2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "புகையிரத களஞ்சிய முற்பணக் கணக்கு - இலங்கை புகையிரதத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — ரூபா. 1,200,000,000 இலிருந்து ரூபா. 1,000,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா. 5,311,000,000 இலிருந்து ரூபா. 5,511,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா. 800,000,000 இலிருந்து ரூபா. 1,000,000,000 வரை.

(இக்கட்டளை 2012.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் / மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2013.03.18 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.7),— 2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.28 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.28

2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31002ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “அரசாங்க தொழிற்சாலையின் களஞ்சிய முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை” என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 120,000,000 இலிருந்து ரூபா. 130,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா. 10,000,000 இலிருந்து ரூபா. 40,000,000 வரை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2012.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் / மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2013.03.21 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.8),— 2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.29 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.29

2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31003ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அரசாங்க தொழிற்சாலையில் செய்த வேலைகள் முற்பணக் கணக்கு - அரசாங்க தொழிற்சாலை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 260,000,000 இலிருந்து ரூபா. 325,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2012.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் / மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2013.03.21 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.9),— 2011ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட கீழ்க்காணும் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. (பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

(இக்கட்டளை 2012.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

## அட்டவணை

### 2011 ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழான கட்டளை

நிதி ஆண்டு 2012 தொடர்பில், 2011 ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சினால் அதிகாரமளிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான முற்பணங்கள் சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | விடய இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள் | | III அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லைகள் | | IV அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பற்று மீதிகளின் உச்ச எல்லைகள் | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | |
| 1. | பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 12101 | 20,000,000 | 24,000,000 | - | - | - | - | 1 |
| 2. | மீள் குடியேற்ற அமைச்சு | 14501 | 10,000,000 | 4,000,000 | 7,000,000 | 2,500,000 | 17,500,000 | 13,000,000 | 2 |
| 3. | காணி உரிமை நிர்ணயத் திணைக்களம் | 28701 | - | - | - | - | 6,000,000 | 31,000,000 | 3 |
| 4. | மாவட்டச் செயலகம், கேகாலை | 27901 | - | - | 35,000,000 | 30,000,000 | - | - | 4 |
| 5. | மாவட்டச் செயலகம், மொனராகலை | 27701 | - | - | 24,000,000 | 23,000,000 | - | - | 5 |
| 6. | மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு | 26701 | 10,700,000 | 12,700,000 | - | - | | | 6 |
| 7. | நிதி, திட்டமிடல் அமைச்சு | 10201 | 24,000,000 | 15,000,000 | - | - | | | 7 |
| 8. | ஆட்பதிவுத் திணைக்களம் | 22701 | - | - | 15,000,000 | 13,000,000 | - | - | 8 |
| 9. | தேசிய நூதனசாலைகள் திணைக்களம் | 20801 | - | - | 5,000,000 | 4,600,000 | - | - | 9 |
| 10. | வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சு | 18101 | 4,500,000 | 3,500,000 | 3,500,000 | 1,000,000 | 5,500,000 | 8,800,000 | 10 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11. | மாவட்டச் செயலகம், கம்பஹா | 25601 | - | - | 57,000,000 | 53,500,000 | - | - | 11 |
| 12. | மாவட்டச் செயலகம், மாத்தறை | 26201 | - | - | - | - | 180,000,000 | 182,000,000 | 12 |
| 13. | உயர் கல்வி அமைச்சு | 17101 | - | - | 4,000,000 | 2,300,000 | - | - | 13 |
| 14. | அரச கணக்குகள் திணைக்களம் | 25001 | - | - | 2,000,000 | 1,800,000 | - | - | 14 |
| 15. | தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு | 17801 | - | - | - | - | 3,000,000 | 3,800,000 | 15 |
| 16. | இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் | 29301 | - | - | 11,000,000 | 10,500,000 | - | - | 16 |
| 17. | சட்ட ஆணைக்குழுத் திணைக்களம் | 23501 | - | - | 500,000 | 350,000 | - | - | 17 |
| 18. | மாவட்ட செயலகம், கண்டி | 25801 | - | - | 55,000,000 | 53,000,000 | - | - | 18 |
| 19. | தொலைத் தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சு | 18501 | - | - | - | - | 2,000,000 | 3,800,000 | 19 |
| 20. | நிதி ஆணைக்குழு அலுவலகம் | 01101 | - | - | 4,000,000 | 1,200,000 | - | - | 20 |
| 21. | இலங்கைச் சுங்கம் | 24701 | 40,000,000 | 40,100,000 | - | - | - | - | 21 |
| | மொத்தம் | | 109,200,000 | 99,300,000 | 223,000,000 | 196,750,000 | 214,000,000 | 242,400,000 | |

2013 மார்ச்சு 20 ஆம் திகதி
கொழும்பு - 01.

ஒப்பம் / மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆவது பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 சனவரி 31 ஆம் திகதிய 1795/35 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2013.05.08ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 13.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2013 மாச்சு 01 ஆம் திகதிய 1799/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 19.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— 2011.08.15 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்ட தற்பொழுதைய கணக்காய்வாளர் தலைமையதிபதியான திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்களின் சம்பளம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரவு அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம் பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் இத்தால் தீர்மானிக்கின்றது.

கணக்காய்வாளர் தலைமையதிபதி திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்கள் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட 2011.08.15 ஆம் திகதியிலிருந்து SL-04-2006 சம்பள அளவுத்திட்டத்தின் 02 ஆம் படிநிலையான ரூபா. 48,940.00 இல் நிறுவி சம்பளம் வழங்குதலும், பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துதலும் மற்றும் சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்தலும் வேண்டுமென்றும் இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 22.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

23.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

24.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

25.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

26.

போதிராஜாராம கல்வி மற்றும் கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

28.

இலங்கைக் கணனிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.